Ours bank with Bank of Baroda


# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

Madurai Mani Tamil Evening Daily ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்








| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 83 | உள்ளூர் - 24.03.2026 | செவ்வாய் | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 83 | வெளியூர் - 25.03.2026 | புதன் | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |



தமிழக அரசு வேலை 23 காலியிடங்கள்!

மார்ச் மாதம் பிறந்தவர்களின் பண்புகள்!

பிரச்சாரத்தை தொடங்கும் இ.பி.எஸ்.!

அனல் பறக்கும் தேர்தல் செய்திகள்!


## சட்டசபை தேர்தலுக்கான பிரசாரத்தில் ஈடுபட பிரதமர் மோடி 29-ந்தேதி கேரளம் வருகை!



திருவனந்தபுரம், மார்ச். 24–

கேரளம் மாநில சட்டசபைக்கான பதவிக்காலம் வருகிற மே 23–ந்தேதி முடிவடைகிறது. இதனால் கேரளத்தில் உள்ள 140 சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் ஏப்ரல் 9–ந்தேதி ஒரேகட்டமாக நடத்தப்படுகிறது.

தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் நேற்றுடன் முடிந்தது. அனைத்து தொகுதிகளிலும் சேர்த்து பிரதான கட்சி வேட்பாளர்கள், சுயேட்சைகள் என மொத்தம் 2,039 பேர் வேட்பு மனு தாக்கல் செய்திருக்கிறார்கள். வேட்பு மனுக்கள் மீதான பரிசீலனை இன்று நடைபெறுகிறது.

கேரளம் மாநிலத்தை பொருத்தவரை கம்யூனிஸ்ட் கட்சிகள் அடங்கிய இடது ஜனநாயக முன்னணி, காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி, பாரதிய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயக முன்னணி ஆகியவை களத்தில் உள்ளன. தற்போது ஆட்சி பொறுப்பில் இருக்கும் கம்யூனிஸ்ட் கட்சி, மீண்டும் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும் முனைப்பில் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறது. அதே நோக்கில் காங்கிரஸ் மற்றும் பாரதிய ஜனதா கட்சியினரும் தேர்தல் களம் காணுகின்றனர்.

கேரளம் மாநில சட்டசபை தேர்தலுக்கு இன்னும் 15 நாட்களே இருக்கிறது. மேலும் பிரசாரத்திற்கு 14 நாட்களே அவகாசம் இருக்கின்றது. தேர்தலில் போட்டியிடக்கூடிய வேட்பாளர்கள், தங்களின் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் கடந்த சில நாட்களாகவே தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தநிலையில் பாரதிய ஜனதா, காங்கிரஸ், கம்யூனிஸ்ட் உள்ளிட்ட பிரதான கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்வதற்காக கட்சி தலைவர்கள் கேரளம் மாநிலத்துக்கு அடுத்தடுத்த நாட்களில் வர உள்ளனர்.

பாராளுமன்ற எதிர்க்கட்சி தலைவரான ராகுல்காந்தி தேர்தல் பிரசாரத்திற்காக கேரளத்திற்கு நாளை (25–ந்தேதி) வருகிறார். அவரைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சியை சேர்ந்த மூத்த தலைவர்கள் பலரும் கேரளத்துக்கு வர உள்ளனர்.

இந்தநிலையில் பாரதிய ஜனதா கட்சி சார்பில் சட்டசபை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்வதற்காக பிரதமர் நரேந்திர மோடி வருகிற 29–ந்தேதி கேரளம் வருகிறார். அவர் திருச்சூரில் நடைபெறும் ரோடுஷோ மற்றும் பாலக்காட்டில் நடை பெறும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பாரதிய ஜனதா வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்கிறார்.

பிரதமர் மோடியை தொடர்ந்து, கேரளத்தில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட பா.ஜ.க. தேசிய தலைவர் நிதின் நபின், மத்திய மந்திரிகள் அமித்ஷா, ராஜ்நாத்சிங், நிர்மலா சீதாராமன், எஸ். ஜெய்சங்கர் மற்றும் பலர் கேரளம் மாநிலத்துக்கு வர உள்ளதாக மாநில பொதுச்செயலாளர் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடி தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட வருவதால் கேரளம் மாநில பாரதிய ஜனதா கட்சியினர் உற்சாகமடைந்துள்ளனர்.

## டிரம்ப் உருவப்படம் பொறிக்கப்பட்ட தங்க நாணயம் வெளியிட முடிவு!

அமெரிக்கா, மார்ச். 24–

அமெரிக்காவின் 250–வது சுதந்திர தினத்தை முன்னிட்டு, ஜனாதிபதி டிரம்பின் உருவம் பொறிக்கப்பட்ட 24 கேரட் தங்க நாணயத்தை வெளியிட அமெரிக்காவின் நுண்கலை ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த நாணயத்தில் டிரம்ப், ஜனாதிபதி அலுவலக மேஜையில் கைகளை வைத்திருப்பது போன்ற படம் இடம்பெறும். நாணயத்தின் மறுபக்கத்தில் கழுகுச் சின்னம் மற்றும் ‘அமெரிக்கா 250 இலச்சினை இருக்கும். அமெரிக்க வரலாற்றில் உயிருடன் இருக்கும் ஒரு ஜனாதிபதியின் உருவம் நாணயத்தில் இடம் பெறுவது இது 2–வது முறை மட்டுமே. இதற்கு முன் 1926–ல் 150–வது சுதந்திர தினத்தின் போது ஜனாதிபதி கால்வின் கூலிட்ஜ் உருவம் நாணயத்தில் இடம்பெற்றது. மேலும் தலைநகர் வாஷிங்டனில் உள்ள புகழ்பெற்ற தேசிய அருங்காட்சியகத்தின் நுழைவு வாயிலில் நாட்டின் 250–வது ஆண்டை கொண்டாடும் வகையில் அந்த நாட்டின் தேசிய பாலூட்டியாக அறிவிக்கப்ப ட்டுள்ள காட்டெருமைகளின் 2 வெண்கல சிலைகள் நிறுவப்பட்டுள்ளன.




## தயாராக இருக்க வேண்டியது மத்திய அரசா? நாட்டு மக்களா?- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கேள்வி!





சென்னை, மார்ச். 24–

மேற்கு ஆசிய போரின் பாதிப்புகள் நீண்ட காலம் நீடிக்கலாம் என்றும், எனவே கொரோனா காலத்தில் ஒன்றுபட்டதைப் போல தேசம் முழுவதும் ஒன்றுபட்டு நிற்க வேண்டும் என்று பிரதமர் மோடி நேற்று பாராளுமன்றத்தில் கேட்டுக்கொண்டார்.

இதுதொடர்பாக, தி.மு.க. தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

மாண்புமிகு பிரதமர் அவர்களே... தயாராக இருக்க வேண்டியது மத்திய அரசா? நாட்டு மக்களா?

கொரோனாவுக்குத் தயாரானதுபோல் மேற்கு ஆசிய போரின் பாதிப்புகளுக்கும் தயாராக இருக்க வேண்டும் என்கிறார் மாண்புமிகு பிரதமர்.

போர்ச்சூழல் தீவிரமடைந்த உடனே, அதன் தாக்கங்களை உணர்ந்து,

* அனைத்துப் பயன்பாடுகளுக்குமான சிலிண்டர்கள் தடையின்றிக் கிடைப்பதை உறுதிசெய்ய வேண்டும்

* வளைகுடா நாடுகளில் சிக்கியுள்ள தமிழர்களை மீட்க வேண்டும்

* மின் நிலையங்களுக்கான எரிவாயு விநியோக அளவுக் கட்டுப்பாடுகளை மாற்றி அமைக்க வேண்டும்

– எனத் தங்களுக்குக் கடிதம் எழுதினேன்.

நிலைமையின் தீவிரத்தை மத்திய ஆட்சியாளர்களுக்கு உணர்த்த எதிர்க்கட்சிகள் பாராளுமன்ற வளாகத்தில் போராட்டம் நடத்தினர்.

தங்களது நடவடிக்கைகளுக்குக் காத்திராமல், பொறுப்புள்ள மாநில அரசாக உயர்நிலை ஆலோசனை மேற்கொண்டு,

* உணவு உற்பத்தித் தொழிற்கூடங்கள் LPG–க்குப் பதிலாக மின் அடுப்புகளைப் பயன்படுத்தும்போது ஏற்படும் கூடுதல் மின்சார நுகர்விற்கு, யூனிட் ஒன்றுக்கு ரூ.2 மானியம்!

* MSME நிறுவனங்கள் மின் அடுப்புகள், மின் சூடேற்றிகள் கொள்முதல் செய்வதற்கு மானியத்துடன் கூடிய கடன்!

* தொழிற்சாலைகள் மாற்று எரிபொருட்களைப் பயன்படுத்திக்கொள்ள TN–PCB இசைவாணை பெறத் தேவையில்லை.

* உணவகங்கள் மூடப்படும் வேளையில், விவசாயிகளின் வாழ்வாதாரத்தினை கருத்தில் கொண்டு, காய்கறிகள் மற்றும் பழங்களை 194 உழவர் சந்தைகளில் எவ்விதக் கட்டுப்பாடு இல்லாமல் அவர்கள் விற்பனை செய்துகொள்ள அனுமதி.

உள்ளிட்ட அறிவிப்புகளை எரிவாயு தட்டுப்பாட்டை எதிர்கொள்ள அறிவித்தோம். (அப்போதே கேட்டேன்:

மக்கள் நலனைக் காக்க ஒன்றிய அரசு என்ன செய்யப் போகிறது?

அப்போதும் பதில் இல்லை.

தொலைநோக்கும் முன்னெச்சரிக்கையும் இன்றிச் செயல்படும் மத்திய பா.ஜ.க. அரசைக் கண்டித்துத் தமிழ்நாடெங்கும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியினர் ஆர்ப்பாட்டம் நடத்தினோம்.

இத்தனைக்கும் பிறகு, “மக்கள் தயாராக இருக்க வேண்டும்” என்று மக்களுக்கே அறிவுரை வழங்குகிறீர்கள்.

மக்களைத் தயாராக இருக்கச் சொல்லும் முன்,

அவர்களைக் காக்க நீங்கள் தயாராக இருக்கிறீர்களா?

மேற்காசியப் போரின் தாக்கங்களில் இருந்து இந்திய மக்களைப் பாதுகாக்க, நீங்கள் எடுத்துள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் என்ன?

இப்போது நாட்டின் கேள்வி ஒன்றுதான்: “எங்களைக் காக்கப் பிரதமர் தயாராக இருக்கிறாரா?” என்று பதிவிட்டு ள்ளார்.

## மோதல் மேலும் தீவிரமடையும் அபாயம்

# எங்க கிட்ட பேச்சே கிடையாது..!! வீச்சு தான்..!!

## டிரம்ப் மூக்கை உடைக்கும் ஈரான்..!




ஈரான், மார்ச். 24–

வளைகுடா நாடுகளில் நீடித்து வரும் அமெரிக்கா – ஈரான் மோதலுக்கு மத்தியில் புதிய குழப்பத்தையும் எதிர்பார்ப்பையும் உருவாக்கியுள்ளன.

அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் வெளியிட்டுள்ள தகவலுக்கும், அதற்கு ஈரான் வெளி யுறவு அமைச்சகம் அளித்த மறுப்புக்கும் இடையே பெரும் முரண்பாடு நிலவி வருகிறது. இந்த நிலைமை, உலக அரசியல் மற்றும் பொருளாதார சந்தைகளில் மீண்டும் பதற்றத்தை அதிகரித்து ள்ளது.

**டிரம்ப் அறிவிப்பு :**

அமெரிக்க அதிபர் Truth Social தளத்தில் வெளியிட்டுள்ள தனது பதிவில், அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே கடந்த இரண்டு நாட்களாக “மிகவும் நல்ல மற்றும் பயனுள்ள” பேச்சுவார்த்தைகள் நடைபெற்றதாக தெரிவித்துள்ளார். மேற்கு ஆசியத்தில் நடைபெற்று வரும் தாக்குதல்களை முழுமையாக முடிவுக்கு கொண்டு வருவதற்கான தீர்வை நோக்கி இந்த பேச்சுகள் நடைபெற்று வருகின்றன என அவர் குறிப்பிட்டார்.

மேலும், இந்த பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு, ஈரானின் மின்நிலையங்கள் மற்றும் எரிபொருள் உள்கட்டமைப்புகளுக்கு எதிராக திட்டமிடப்பட்டிருந்த அனைத்து ராணுவ தாக்குதல்களையும் 5 நாட்களுக்கு ஒத்திவைக்க உத்தரவிட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த இடைநிறுத்தம், நடந்து வரும் பேச்சுவார்த்தைகளின் வெற்றியைப் பொறுத்தே அமல்படுத்தப்படும் எனவும் டிரம்ப் தெரிவித்தார்.

**ஈரான் மறுப்பு:**

ஆனால், டிரம்ப் வெளியிட்ட தகவலை Iranian Ministry of Foreign Affairs முற்றிலும் மறுத்துள்ளது. அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே எந்த பேச்சுவார்த்தையும் நடைபெறவில்லை என்று தெளிவாக தெரிவித்துள்ளது. மேலும், தற்போதைய போர் சூழ்நிலையில், தங்களது இலக்குகள் நிறைவேறும் வரை எந்தவொரு பேச்சுவார்த்தையையும் ஏற்க முடியாது என்ற நிலைப்பாட்டை ஈரான் மீண்டும் வலியுறுத்தியுள்ளது. மேலும் டிரம்ப் தனது பதிவில் கூறியவற்றை பார்க்கும் போது, ஈரானுக்கு எதிராக அவர் வெளியிட்ட மிரட்டல்களிலிருந்து பின்வாங்கும் முயற்சியாகவே பார்க்கப்படுகின்றன எனவும் ஈரான் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஹார்முஸ் நீரிணை இந்த மோதலில் மிக முக்கியமான அம்சமாக பார்க்கப்படும் Strait of Hormuz குறித்து ஈரான் தனது நிலைப்பாட்டில் மாற்றமில்லை என தெரிவித்துள்ளது. ஈரானுக்கு எதிராக செயல்படும் நாடுகளுக்கு இந்த முக்கிய கடல் வழித்தடம் திறக்கப்படாது என்றும், தொடர்ந்து கட்டுப்பாட்டில் இருக்கும் என்றும் ஈரான் வெளியுறவு துறை அமைச்சகம் கூறியுள்ளது. ஹார்முஸ் நீரிணை உலகளாவிய எண்ணெய் மற்றும் எரிவாயு போக்குவரத்திற்கான முக்கிய பாதையாக இருப்பதால், இதை ஈரான் கைப்பற்றி மூடப்பட்ட நிலையில் உலக பொருளாதாரத்தில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்தும். இந்த முரண்பட்ட அறிக்கைகள், உலக சந்தைகளில் நிலவும் அச்சத்தை கூடுதலாக அதிகரித்துள்ளன. பேச்சுவார்த்தை நடைபெறுகிறது என்ற நம்பிக்கை ஒரு பக்கம் இருந்தாலும், அதை ஈரான் மறுத்துள்ளதால், மோதல் மேலும் தீவிரமடையும் அபாயம் உருவாகியுள்ளது.

இதனால், எரிபொருள் விலை, கப்பல் போக்குவரத்து மற்றும் சர்வதேச வர்த்தகத்தில் அடுத்த கட்ட மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

## ஒருவர் வேறு மதத்திற்கு மாறினால், அவரின் பட்டியலிடப்பட்ட சாதி அந்தஸ்து செல்லாது! உச்சநீதிமன்றம் அதிரடி!




சென்னை, மார்ச். 24–

ஒருவர் வேறு மதத்திற்கு மாறினால், அவரின் பட்டியலிடப்பட்ட சாதி அந்தஸ்து செல்லாது என கூறியுள்ள உச்சநீதிமன்றம் ஹிந்து, சீக்கியர், புத்த மதத்திற்கே SC அந்தஸ்து பொருந்தும் என்றும் தெரிவித்துள்ளது.

வேறு மதத்தில் உண்மையான நம்பிக்கை இல்லாமல், இட ஒதுக்கீட்டுப் பலன்களைப் பெறுவதற்காக மதம் மாறுவதை அனுமதிக்க முடியாது என கடந்த 2024ம் ஆண்டு நவம்பர் மாதம் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்த நிலையில், தற்போது பட்டியலிடப்பட்ட சாதி (SC) அந்தஸ்து குறித்து உச்ச நீதிமன்றம், முக்கிய விளக்கத்தை வழங்கியுள்ளது.

## பாமக, அமமுக போட்டியிடும் தொகுதிகள் என்னென்ன?



சென்னை, மார்ச். 24–

பாமக மற்றும் அமமுக போட்டியிட விருப்பம் தெரிவித்திருக்கும் தொகுதிகளின் உத்தேசப் பட்டியல் வெளியாகியுள்ளது.

**பாமக**

பாப்பிரெட்டிபட்டி, கும்மிடிப்பூண்டி, பென்னாகரம், குன்னம், தருமபுரி, விழுப்புரம், அந்தியூர், ஆற்காடு, ஓமலூர், திருவள்ளூர், சங்ககிரி, பாலக்கோடு, விக்கிரவாண்டி, திருத்தணி, செய்யாறு, செஞ்சி, ஜெயங்கொண்டம், திண்டிவனம் (அ) அரூர், மயிலம், வானூர் (அ) காட்டுமன்னார்கோவில், நெய்வேலி, விருத்தாசலம், மேட்டூர், சோளிங்கர், புவனகிரி

**அமமுக**

சைதாப்பேட்டை, திருப்பத்தூர், பூவிருந்தவல்லி, நான்குநேரி, ஓட்டப்பிடாரம், பெரியகுளம், மதுரை வடக்கு, திருவையாறு, காரைக்குடி, திருச்சி மேற்கு, மன்னார்குடி

## திமுக கூட்டணியில் விசிகவுக்கு 8 தொகுதிகள் ஒதுக்கீடு!



சென்னை, மார்ச். 24–

திமுக தலைமையிலான மதச்சார்பற்றக் கூட்டணியில் திருமாவளவனின் விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கு 8 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

திமுக கூட்டணியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி 8 தொகுதிகளில் போட்டியிட முதல்வர் ஸ்டாலின் மற்றும் விசிக தலைவர் திருமாவளவன் முன்னிலையில் ஒப்பந்தம் கையொப்பமானது.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இடம் பெற்றுள்ள விடுதலை சிறுத்தைகள் கட்சி, தமிழ்நாட்டில் மொத்தம் 8 (எட்டு) சட்டப்பேரவைத் தொகுதிகளில் போட்டியிடுவதெனவும் – அவற்றில் 6 தனித் தொகுதிகளிலும் 2 பொதுத் தொகுதிகளிலும் போட்டியிடுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

## தலையங்கம்

மதுரை மணி

**செவ்வாய்க்கிழமை 24.03.2026**
**விசுவாவசு தமிழ் வருடம்**
**பங்குனி மாதம் 10-ம் தேதி**

# இந்தியாவில் வேலையின்மை பிரச்சனை இருப்பது ஏன்?




இந்திய இளைஞர்களின் நிலை பல முரண்பாடுகளால் நிரம்பியுள்ளது. ஒரு புறம் அதிகமான மனித வளம்; மறுபுறம் பற்றாக்குறை. ஒரு புறம் நம்பிக்கை; மறுபுறம் திசைதவறல்.

பிரிட்டிஷ் பொருளாதார நிபுணர் ஜோன் ராபின்சன் ஒருமுறை கூறியதைப் போல, ‘‘இந்தியாவை பற்றி நீங்கள் எதைச் சரியாகக் கூறினாலும், அதற்கு நேர்மாறான கருத்தும் உண்மையானதாகவே இருக்கும்.’’

அசிம் பிரேம்ஜி பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள சமீபத்திய ‘‘பணியாற்றும் இந்தியாவின் நிலை’’ குறித்த அறிக்கையைப் போல, மிகச் சில ஆய்வுகளே இந்த முரண்பாட்டை தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றன.

முதலாவதாக, ஒரு முக்கியமான புள்ளிவிவரத்தை நாம் கவனிக்க வேண்டும். இந்தியாவில் 15 முதல் 29 வயதுக்கு உட்பட்ட 367 மில்லியன் இளைஞர்கள் உள்ளனர். இதுவே உலகின் மிகப்பெரிய இளைஞர் மக்கள் தொகையாகும். மேலும், இந்தியாவின் உழைக்கும் வயதுடைய மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு இவர்களாகவே உள்ளனர்.

நாட்டிலுள்ள 367 மில்லியன் இளைஞர்களில், 263 மில்லியன் பேர் தற்போது பள்ளி அல்லது கல்லூரிகளில் பயிலவில்லை. எனவே, இவர்கள் தற்போது பணிகளில் ஈடுபடக்கூடிய அல்லது விரைவில் வேலைவாய்ப்புகளில் இணையக்கூடிய குழுவினராக உள்ளனர். இதனாலேயே இவர்கள் ‘‘சாத்தியமான பணியாளர் வளம்’’ (potential workforce) என்று அழைக்கப்படுகிறார்கள்.

இது மிகவும் மதிப்புமிக்க ஒரு மக்கள்தொகையியல் சார்ந்த சாதகமான நிலையாகும். கிழக்கு ஆசிய நாடுகள் பெரும் பொருளாதார வெற்றியை அடைய உதவியதைப் போன்றதொரு சாதக நிலை இது. ஆனால், இந்தப் புள்ளிவிவரங்களுக்குப் பின்னால், மிகவும் கவலைக்குரிய ஓர் எதார்த்தமும் மறைந்துள்ளது.

மேலோட்டமாகப் பார்க்கையில், நம்பிக்கை கொள்வதற்கான சில காரணங்கள் இருப்பதாகவே தோன்றுகிறது. கடந்த 40 ஆண்டுகளாக, இந்தியா தனது கல்வி அமைப்பில் பெரும் மாற்றங்களைச் செய்துள்ளதாக அந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

உயர்நிலைப் பள்ளி மற்றும் கல்லூரிகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது. இந்த வளர்ச்சிப் போக்கு, இந்தியாவின் ஒட்டுமொத்த வளர்ச்சி நிலைக்கு இணையாகவே பெரும்பாலும் நகர்ந்து வந்துள்ளது. ஆண், பெண் என இருபாலர் இடையிலுமான இடைவெளி குறைந்துள்ளது. சாதி சார்ந்த தடைகளும் குறைந்துள்ளன. இருப்பினும் அவை முழுமையாக மறைந்துவிடவில்லை.

# தேர்தல் நடத்தை: டாஸ்மாக் மது விற்பனையில் கட்டுப்பாடுகள்!



சென்னை, மார்ச். 24–

தமிழகத்தில் சட்டமன்றத் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருப்பதால், மதுபான விற்பனையில் புதிய கட்டுப்பாடுகளை தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்) விதித்துள்ளது. இதன்படி, தனிநபர் ஒருமுறை வாங்குவதற்கான மதுபான அளவுகள் வரையறுக்கப்பட்டு உள்ளன. தேர்தல் முடியும் வரை ஒரு தனிநபருக்கு குறிப்பிட்ட அளவுகளில் மட்டுமே மதுபானங்கள் விற்பனை செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தி உள்ளது. வீரியம் மிக்க மதுபானங்கள் (Hard Liquor) அதிகபட்சம் 4.5 லிட்டர், பீர் (Beer) அதிகபட்சம் 7.8 லிட்டர், ஒயின் (Wine) அதிகபட்சம் 9 லிட்டர் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு நபர் ஒரு நேரத்தில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பாட்டில்களை மட்டுமே வாங்க முடியும். ஐ.எம்.எஃப்.எல் அல்லது இறக்குமதி மதுபானம் 6 முழு பாட்டில்கள் (750ml) அல்லது 12 அரை பாட்டில்கள் (375ml) அல்லது 24 குவார்ட்டர் பாட்டில்கள் (180ml). பீர், அதிகபட்சம் 12 பாட்டில்கள் (650ml).

டாஸ்மாக் மேலாண்மை வாரியத்தின் உத்தரவின்படி, அனைத்து மாவட்ட மேலாளர்களும் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள மேற்பார்வையாளர்கள் மற்றும் விற்பனையாளர்களுக்கு இதுகுறித்த சுற்றறிக்கையை அனுப்பியுள்ளனர். மது விற்பனை அனைத்தும் கணினி மூலம் கண்காணிக்கப்படுகிறது. அனுமதிக்கப்பட்ட அளவை விட கூடுதல் விற்பனை நடந்தால், கணினித் திரையில் அது உடனடியாகத் தெரியவரும். விதிகளை மீறி ஒரே ரசீதில் (Single Bill) கூடுதல் மது விற்பனை செய்யும் ஊழியர்கள் மீது விசாரணை நடத்தப்பட்டு, கடுமையான துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

மொத்த விற்பனை (Bulk Sales) என்றால் என்ன என்பதில் தெளிவு இல்லை என மேற்பார்வையாளர்கள் கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்து இந்த விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், கடந்த ஆண்டுகளை விட 50% கூடுதல் ஸ்டாக் வைத்திருக்கக் கூடாது. சட்டவிரோதமாக மதுவை இருப்பு வைப்பதோ அல்லது அனுமதிக்கப்பட்ட நேரத்தைத் தாண்டி விற்பனை செய்வதோ கூடாது என டாஸ்மாக் நிர்வாகம் எச்சரித்துள்ளது.

# வங்கி வாடிக்கையாளர்கள் கவனத்திற்கு.. ஏப்.1 முதல் ஏடிஎம் விதிகளில் வரும் முக்கிய மாற்றங்கள்!



புதுடெல்லி, மார்ச். 24–

வரும் ஏப்ரல் 1 புதிய நிதியாண்டு முதல் ஏடிஎம் விதிகளில் சில முக்கிய மாற்றங்கள் கொண்டு வரப்பட உள்ளன. இது பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

* யுபிஐ பயன்படுத்தி ஏடிஎம்களில் பணம் எடுத்தால் வரும் 1 ஆம் தேதி முதல் கட்டணம் வசூலிக்கப்படும் என்று ஹெச்.டி.எப்.சி வங்கி தெரிவித்துள்ளது. அதாவது ஏடிஎம் கார்டுகளுக்கு உள்ள அதே விதி இனி பொருந்தும் என்று தெரிவிக்கப்பட்டு ள்ளது. தற்போது வரை யுபிஐ கியூஆர் கோடு வழியாக ஏடிஎம்களில் பணம் எடுத்தால் தனியாக கட்டணம் கிடையாது. இனி, 5 முறைக்கு மேல் யுபிஐ பயன்படுத்தி ஏடிஎம்களில் பணம் எடுத்தால் ரூ. 23 கட்டணம் பிடித்தம் செய்யப்படும்.

* பொதுத்துறை வங்கியான பஞ்சாப் நேஷனல் வங்கி, டெபிட் கார்டுகளுக்கான தினசரி பணம் எடுக்கும் வரம்புகளை மாற்றியுள்ளது. புதிய விதிகளின்படி, கார்டு வகையைப் பொறுத்து தினமும் ரூ. 50,000 முதல் ரூ. 75,000 வரை மட்டுமே பணம் எடுக்க முடியும். இதற்கு முன்பு வரை ரூ. 1 லட்சம் வரை பணம் எடுக்க முடியும் என்ற விதி இருந்தது.

* ஜியோ பேமண்ட்ஸ் வங்கியும் கியூஆர் கோடு அடிப்படையில் பணம் எடுக்கும் வசதியை கொண்டு வந்துள்ளது. இந்த வசதியை பயன்படுத்தி வாடிக்கையாளர்கள், யுபிஐ கியூஆர் கோடை ஸ்கேன் செய்து, நியமிக்கப்பட்ட வங்கி பிரதிநிதிகளிடம் பணத்தை பெறும் வசதி கொண்டு வரப்பட்டுள்ளது.

* பந்தன் வங்கி ஏப்ரல் 1, 2026 முதல் டெபிட் கார்டு பயனர்களுக்கான இலவச ஏடிஎம் பரிவர்த்தனைகளின் எண்ணிக்கையை மாற்றியுள்ளது. புதிய விதிகளின்படி, பந்தன் வங்கி ஏடிஎம்–களில் மாதத்திற்கு அதிகபட்சம் 5 இலவச பரிவர்த்தனைகள் மற்றும் வரம்பற்ற நிதியற்ற பரிவர்த்தனைகள் செய்ய அனுமதி வழங்கப்படும். ஆனால், பிற வங்கி ஏடிஎம்–களில் மேற்கொள்ளப்படும் பரிவர்த்தனைகளுக்கு, மெட்ரோ நகரங்களில் மாதத்திற்கு 3 பரிவர்த்தனைகள் மற்றும் மெட்ரோ அல்லாத நகரங்களில் 5 பரிவர்த்தனைகள் மட்டுமே இலவசமாக அனுமதிக்கப்படும். இந்த வரம்பு நிதி மற்றும் நிதியற்ற பரிவர்த்தனைகள் இரண்டையும் சேர்த்து கணக்கிடப்படும்.

# சமையல் கியாஸ் ஏற்றிக்கொண்டு மேலும் 2 இந்திய கப்பல்கள் ஹார்முஸ் நீரிணையை கடக்கத் தொடங்கின!




அமெரிக்கா, மார்ச். 24–

நீரிணைக்கு மேற்கு பகுதியில் 24 கப்பல்களும், கிழக்கில் 4 கப்பல்களும் நின்று கொண்டிருந்தன. இந்தியாவின் ராஜதந்திர நடவடிக்கைகளால், இந்திய கப்பல்கள் ஷிவாலிக், நந்தா தேவி ஆகியவை சமீபத்தில் ஹார்முஸ் நீரிணையை கடந்து செல்ல அனுமதிக்கப்பட்டன. இதுவரை 92 ஆயிரத்து 712 டன் சமையல் கியாசுடன் அக்கப்பல்கள் குஜராத் துறைமுகங்களுக்கு பத்திரமாக வந்து சேர்ந்தன.

இந்நிலையில், மேலும் 2 இந்திய கப்பல்கள் ஹார்முஸ் நீரிணையை கடக்கத் தொடங்கி உள்ளன. சமையல் கியாஸ் ஏற்றப்பட்ட பைன் கியாஸ், ஜேக் வசந்த் ஆகிய 2 கப்பல்களும் நேற்று பாரசீக வளைகுடாவில் இருந்து பயணத்தை தொடங்கின. இரு கப்பல்களும் அருகருகே பயணம் செய்கின்றன.

ஈரானின் லாரக் தீவுக்கும், கேஷம் தீவுக்கும் இடையே உள்ள கடல் பகுதியில் வந்து கொண்டிருப்பதாக கப்பல் நடமாட்ட கண்காணிப்பு தரவுகள் தெரிவிக்கின்றன. அக்கப்பல்கள் தங்களது அடையாளம் ஈரான் அதிகாரிகளுக்கு நன்றாக தெரியும் வகையில் செல்கின்றன.

# வாக்குப்பதிவு இயந்திரங்கள், கட்டுப்பாட்டு கருவிகள் மற்றும் விவிபேட் மெசின்கள் கம்ப்யூட்டர் மூலம் குலுக்கல் முறையில் ஒதுக்கீடு செய்யும் பணி குறித்த ஆலோசனை கூட்டம்!



நாமக்கல், மார்ச். 24–

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள, நாமக்கல், ராசிபுரம், சேந்தமங்கலம், பரமத்தி வேலூர், திருச்செங்கோடு மற்றும் குமாரபாளையம் ஆகிய 6 சட்டசபை தொகுதிக்கு உட்பட்ட வாக்குச்சாவடி களில், வாக்குப்பதிவி ன்போது பயன்படுத்தப்பட உள்ள எலக்ட்ரானிக் வாக்குப்பதிவு இயந்திரங்கள், கட்டுப்பாட்டு கருவிகள் மற்றும் விவிபேட் மெசின்கள் கம்ப்யூட்டர் மூலம் குலுக்கல் முறையில் ஒதுக்கீடு செய்யும் பணி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.

அரசியில் கட்சிப் பிரதிநிதிகள் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் துர்கா மூர்த்தி தலைமை வகித்தார்.

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 6 தொகுதிகளுக்கான வாக்குசாவடிகளில் பயன்படுத்துவதற்காக தேர்தல் ஆணையம் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட 5,613 வாக்குப்பதிவு இயந்திரங்கள், 2,241 கட்டுப்பாட்டு இயந்திரங்கள், 2,360 விவிபேட் இயந்திரங்கள் என மொத்தம் 10,214 இயந்திரங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள கிடங்கில் போலீஸ் பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளன. ஆன்லைன் மூலம் கம்ப்யூட்டர் ரேண்டம் குலுக்கல் முறையில் இந்த மெசின்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. ராசிபுரம் தொகுதிக்கு மொத்தம் 1,054 இயந்திரங்கள், சேந்தமங்கலம் தொகுதிக்கு மொத்தம் மொத்தம் 1,123 இயந்திரங்கள், நாமக்கல் தொகுதிக்கு மொத்தம் 1,147 இயந்திரங்கள், பரமத்திவேலூர் தொகுதிக்கு மொத்தம் 990 இயந்திரங்கள். திருச்செங்கோடு தொகுதிக்கு மொத்தம் 1,066 இயந்திரங்கள், குமாரபாளயம் சட்டசபை தொகுதிக்கு மொத்தம் 1,197 இயந்திரங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன.

மாவட்டத்தில் உள்ள 6 சட்டசபை தொகுதிகளுக்குட்பட்ட 1,780 வாக்குசாவடிகளில் முதற்கட்டமாக 5,340 எலக்ட்ரானிக் வாக்குப் பதிவு இயந்திரங்கள், 20 சதவீதம் தயார் நிலையில் 1,236 இயந்திரங்கள் என மொத்தம் 6,576 இயந்திரங்கள் ஒதுக்கீடு செய்யும் பணி நடைபெற்றது.

டிஆர்ஓக்கள் சரவணன், கண்ணன், மாவட்ட ஆட்சியரின் தேர்தல் பிரிவு நேர்முக உதவியாளர் சுஜாதா மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

# தமிழகத்தில் எங்கெல்லாம் மழை பெய்யும்?



சென்னை, மார்ச். 24–

தமிழகத்தில் கோடை வெயில் படிப்படியாக அதிகரித்து வரும் நிலையில், வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக அடுத்த இரண்டு நாட்களுக்கு கோவை மற்றும் நீலகிரி உள்ளிட்ட மாவட்டங்களில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்து ள்ளது. அதேசமயம், மார்ச் 26 முதல் வெப்பம் மேலும் 2–3 டிகிரி செல்சியஸ் வரை உயரக்கூடும் என்பதால் மக்கள் முன்னெச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘‘தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்ச வெப்பநிலையில் பொதுவாக குறிப்பிடத்தக்க மாற்றம் ஏதுமில்லை. அதிகபட்ச வெப்பநிலை வட தமிழகத்தில் ஓரிரு இடங்களில் இயல்பிலிருந்து 2–3 டிகிரி செல்சியஸ் வரை குறைந்தும், தென் தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் இயல்பை ஒட்டியும் இருந்தது. அதிகபட்ச வெப்பநிலை: கரூர் பரமத்தி: 37.5 டிகிரி செல்சியஸ், குறைந்தபட்ச வெப்பநிலை சமவெளிப்பகுதிகளில் திருத்தணி 22.5 டிகிரி செல்சியஸ்,மலைப்பகுதிகளில் கொடைக்கானல் 9.1 டிகிரி செல்சியஸ் பதிவாகியுள்ளது.’’ என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்து ள்ளது. அடுத்த 6 தினங்களுக்கான வானிலை முன்னறிவிப்பு மற்றும் எச்சரிக்கையை சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ளது.

வளிமண்டல சுழற்சி: மன்னார் வளைகுடா முதல் மேற்கு வி தர்ப்பா வரை ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

**மழை குறித்த முன்னறிவிப்பு:**

24–03–2026: கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் ஓரிடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

25–03–2026 மற்றும் 26–03–2026: தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

27–03–2026: கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் ஓரிடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

28–03–2026 மற்றும் 29–03–2026: மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

**அதிகபட்ச வெப்பநிலை பற்றிய முன்னறிவிப்பு:**

24 மணி நேர அதிகபட்ச வெப்பநிலை மாறுதல்:


24–03–2026 முதல் 25–03–2026 வரை: தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலையில் குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கான வாய்ப்பு குறைவு.

26–03–2026 மற்றும் 27–03–2026: தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை ஓரிடங்களில் 2–3 டிகிரி செல்சியஸ் வரை படிப்படியாக உயரக்கூடும்.

**இயல்பு நிலையிலிருந்து வெப்பநிலையின் வேறுபாடு:**

24–03–2026 முதல் 25–03–2026 வரை: அதிகபட்ச வெப்பநிலை இயல்பை ஒட்டியே இருக்கக்கூடும்.

26–03–2026 மற்றும் 27–03–2026: அதிகபட்ச வெப்பநிலை ஓரிடங்களில் இயல்பிலிருந்து 2–3 டிகிரி செல்சியஸ் வரை அதிகமாக இருக்கக்கூடும்.



# எண் கணிதம் பார்வையில் மார்ச் மாதம் பிறந்தவர்களின் பண்புகள்!



எண்கணிதத்தில் ஒவ்வொரு எண்ணுக்கும் ஆழமான அர்த்தங்கள் இருப்பதாக நம்பப்படுகிறது. அந்த வகையில் எண் 3 ஆனது, குரு பகவானுடன் தொடர்பு கொண்ட ஒரு எண்ணாக பார்க்கப்படுகிறது. படைப்பாற்றல், சுய வெளிப்பாடு, தனித் திறமைகளை பிரதிபலிக்கும் ஒரு எண்ணாகவும் பார்க்கப்படுகிறது. எண் 3 உடன் தொடர்பு கொண்ட மார்ச் மாதத்தில் பிறந்தவர்களுக்கும் இந்த சிறப்பம்சம் இருப்பதாக நம்பப்படுகிறது. அந்த வகையில், இவர்களிடம் காணப்படும் தனித்துவமான பண்புகள் என்ன? சுவாரஸ்ய அம்சங்கள் என்ன? என்பது குறித்து சற்று விரிவாக இங்கு காணலாம்!

**தலைமைப் பண்பு கொண்டவர்கள்:** மார்ச் மாதத்தில் பிறந்தவர்கள் நேர்மறையான ஆற்றலுக்கு பெயர் பெற்றவர்கள். தங்கள் மீது நம்பிக்கை வைத்து, மன உறுதியுடன் சவால்களை எதிர்கொள்ளக் கூடியவர்கள். கடின உழைப்பின் மூலம், தங்கள் துறையில் உயர் பதவிகள், உச்ச நிலைகளை அடையும் வாய்ப்பு காணப்படுகிறது.

**படைப்பாற்றல் கொண்டவர்கள்:** மார்ச் மாதம் பிறந்தவர்கள் பிறவி கலைஞர்கள். இசை, இலக்கியம், ஓவியம், நடனம், நடிப்பு என தங்கள் கலைத்திறமைக்கு பெயர் பெற்றவர்கள். சிறு வயது தொடங்கி, தனது தனித்திறமைகளை வளர்த்துக்கொள்ள முயற்சிக்கும் இவர்கள், வளர்ந்த பின் ஊர் போற்றும் எழுத்தாளர், இசை கலைஞர், ஓவியர் என பெயர் எடுக்கின்றனர்.

**பேச்சாற்றல் மிக்கவர்கள்:** குரு பகவானை பிரதிபலிக்கும் எண் 3 உடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருக்கும் இவர்கள், அபரிவிதமான பேச்சாற்றலுக்கு பெயர் பெற்றவர்கள். தங்கள் பேச்சாற்றல் மூலம் தொழில் வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட வாழ்க்கை இரண்டிலும் சாதனைகள் பல செய்கின்றனர். கூடுதலாக, இவர்களிடம் காணப்படும் நேர்மறை ஆற்றல், எதிர்வரும் பிரச்சனைகளை சமாளிக்க தேவையான செயல்திட்டங்களை காண்பித்து தருகிறது.

**கற்றல் ஆர்வம் மிக்கவர்கள்:** மார்ச் மாதம் பிறந்தவர்கள் அடிப்படையில் தங்கள் திறமகளை மேம்படுத்த கடுமையாக உழைப்பவர்கள். நீண்ட தூர பயணங்களை மேற்கொள்ள தயாராக இருப்பவர்கள். மேலும், தான் பெற்ற அனுபவத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து, பிறர் திறமைகளை வளர்க்கும் வலிமை கொண்டிருக்கின்றனர்.

**ஆன்மீகத்தில் நாட்டம் அதிகம்:** மரபு வழி நம்பிக்கைகளின் படி எண் 3, ஆன்மீகத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. அந்த வகையில் ஆண்டின் மூன்றாம் மாதத்தில் பிறந்த மார்ச் குழந்தைகள், வலுவான ஆன்மீகத் தொடர்பையும், தெய்வீகத்தைப் பற்றிய ஆழமான புரிதலையும் கொண்டிருப்பதாக நம்பப்படுகிறது!

**அன்பும் – கருணையும்:** மார்ச் மாதம் பிறந்தவர்கள், மற்றவர்கள் மீது அளவு கடந்த அன்பை வெளிப்படுத்தும் குணம் கொண்டிருக்கின்றனர். ஆழ்ந்த பரிவையும், கருணையையும் கொண்டிருப்பார்கள். அன்பானவர்கள், அக்கறை உள்ளவர்கள், மற்றவர்களுக்கு உதவி கரம் நீட்ட எந்நேரமும் தயாராக இருப்பவர்கள். மார்ச் மாதம் பிறந்தவர்களுடன் பழகுவதற்கு இனிமையாக இருக்கும்!

**உள்ளுணர்வுக்கு மதிப்பு அளிப்பவர்கள்:** மார்ச் மாத குழந்தைகள், உள்ளுணர்வுகளுக்கு மதிப்பு அளித்து செயல்படும் ஒரு நபராகவும், தெளிவான சிந்தனை கொண்ட ஒரு நபராகவும் பார்க்கப்படுகின்றனர். தெளிவான எண்ண ஓட்டங்கள், அவர்களின் வெற்றிக்கு உதவி செய்கிறது. முற்போக்கு சிந்தனை அவர்களின் முயற்சிகளுக்கு ஆதரவு அளிக்கிறது.

**இயல்பானவர்கள்:** மார்ச் மாத குழந்தைகள் எதிர்காலம் குறித்த கனவுகளுடன் இருப்பவர்கள் – அதேநேரம், நடைமுறை வாழ்க்கைக்கு பொருந்தும் எதார்த்தமான சிந்தனைகளுடன் பயணிப்பவர்கள். தங்கள் வெற்றிக்கு அதிர்ஷ்டத்தை நம்புவதை காட்டிலும், கடின உழைப்பை அதிகம் நம்புபவர்கள்.

**சிறந்த காதலர்கள்:** மார்ச் மாதம் பிறந்தவர்கள் சிறந்த காதலர்களாக இருப்பதற்கு வாய்ப்பு அதிகம். அடுத்தவர் உணர்வுகளுக்கு மதிப்பு அளிக்கும் பண்பு கொண்ட இவர்கள், தங்கள் வருங்கால வாழ்க்கை துணை / காதல் துணையின் உணர்வுகளுக்கு மதிப்பு அளித்து செயல்படுவார்கள். அந்த வகையில் சிறந்த ஒரு காதலன் / காதலி என பெயர் எடுப்பார்கள்.

**பொறுப்புத் துறப்பு:** பொதுவான ஜோதிடம் / எண் கணிதம் நம்பிக்கையின் அடிப்படையில் இந்த தகவல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. அறிவியல் பூர்வமான ஆதாரங்கள் கொண்டிருக்கவில்லை!

# தொடர்ந்து குறைந்து வரும் தங்கம் விலை!



சென்னை, மார்ச். 24–


சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.2,720 குறைந்து ரூ.1,04,000–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.340 குறைந்து ரூ.13,000–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

தங்கத்தை போன்று வெள்ளி விலையும் இன்று குறைந்துள்ளது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.10 குறைந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.240–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

# நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## உங்கள் சிறுநீரகங்களின் நிலை குறித்து உங்கள் முகமே உணர்த்தும்..! இந்த அறிகுறிகள் இருந்தால் அலட்சியப்படுத்தாதீங்க..!



சிறுநீரக ஆரோக்கியம்: சிறுநீரகங்கள் நமது உடலில் உள்ள மிக முக்கியமான உறுப்புகளாகும். இரத்தத்தைச் சுத்திகரிப்பதும், கழிவுகளை வெளியேற்றுவதும் இவற்றின் முக்கியப் பணியாகும். மனித உடலில் மிகவும் கடினமாக உழைக்கும் உறுப்புகள் இவையே. இத்தகைய முக்கிய உறுப்புகளின் செயல்பாடு பாதிக்கப்பட்டால், தீவிரமான உடல்நலப் பிரச்சினைகள் ஏற்படலாம்.

இருப்பினும், சிறுநீரக நோய்களின் அறிகுறிகள் ஆரம்ப நிலையில் அவ்வளவாகத் தென்படுவதில்லை. ஆனால், நமது உடல் சில சிறிய மாற்றங்கள் மூலம் நமக்கு எச்சரிக்கை விடுக்கிறது. இவற்றைச் சரியான நேரத்தில் கண்டறிந்தால், உயிருக்கே ஆபத்தான சூழ்நிலைகளை நாம் தவிர்க்கலாம். புகழ்பெற்ற மயக்கவியல் நிபுணரும் வலி மருத்துவ வல்லுநருமான டாக்டர் குனால் சூத், சிறுநீரக நோய்களின் ஆரம்ப அறிகுறிகள் குறித்த விவரங்களை ஒரு இன்ஸ்டாகிராம் காணொளியில் வெளியிட்டுள்ளார். வாருங்கள், அவற்றைப் பார்ப்போம்.

**சிறுநீரின் நிற மாற்றம்**

பொதுவாக, சிறுநீர் மஞ்சள் நிறத்தில் இருக்கும். ஆனால் அது தேநீர் நிறத்திலோ அல்லது அடர் பழுப்பு நிறத்திலோ மாறினால், அது சிறுநீரகங்கள் மீது கடுமையான அழுத்தம் இருப்பதைக் குறிக்கிறது. இந்த நிற மாற்றம் தசைச் சிதைவு அல்லது சிறுநீரில் இரத்தம் கலந்திருப்பதன் காரணமாக ஏற்படலாம். இது சிறுநீரகப் பாதிப்பின் ஒரு முக்கிய அறிகுறியாகும்.

**சிறுநீரில் நுரை**

சிறுநீர் கழிக்கும்போது நுரை தென்பட்டால், அது சிறுநீரகங்களில் உள்ள வடிகட்டிகள் (filters) பாதிக்கப்பட்டிருப்பதற்கான அறிகுறியாகும். சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்டிருக்கும்போது, இரத்தத்தில் உள்ள புரதம் (அல்புமின்) சிறுநீர் வழியாக வெளியேறுகிறது. இதனால் சிறுநீரின் மேற்பரப்பில் நுரை படியத் தொடங்குகிறது. இத்தகைய அறிகுறியை நீங்கள் கவனித்தால், உடனடியாகச் சிறுநீர் பரிசோதனை செய்துகொள்வது சிறந்தது.

**கண்கள் மற்றும் முகத்தில் வீக்கம்**

காலையில் தூங்கி எழுந்ததும் கண்களுக்குக் கீழே வீக்கம் அல்லது முகம் வீங்கியது போலத் தென்பட்டால், அது சிறுநீரகப் பிரச்சினையாக இருக்கக்கூடும். உடலில் சோடியம் (உப்பு) அளவு அதிகரிக்கும்போதோ அல்லது புரதத்தின் அளவு குறையும்போதோ, நீர்ச்சத்து திசுக்களுக்குள் புகுந்துவிடுகிறது. குறிப்பாகக் கண் இமைகளைச் சுற்றியுள்ள தோல் தளர்வாக இருப்பதால், அவ்விடங்களில் வீக்கம் விரைவாகத் தென்படுகிறது.

**பசியின்மை**

சிறுநீரகங்களின் செயல்பாடு குறையும்போது, இரத்தத்தில் கழிவுகளின் (நச்சுகளின்) அளவு அதிகரிக்கிறது. இதனால் நமக்குப் பசியின்மை ஏற்படுவதுடன், எப்போதும் வாந்தி வருவது போன்ற உணர்வும் ஏற்படுகிறது. மேலும், சிறுநீரகங்கள் சரியாகச் செயல்படாதபோது, சிவப்பணுக்களின் உற்பத்தி குறைந்து இரத்த சோகை ஏற்படுகிறது. இதனால் எந்த வேலையும் செய்யாமலே கூட, அதீத சோர்வு ஏற்படுகிறது. சிறுநீரக நோய் உள்ளவர்களில் சுமார் 70 சதவீதம் பேர் இத்தகைய சோர்வை உணர்வதாக டாக்டர் குனால் சூத் தெரிவித்துள்ளார்.

**பாதங்களில் வீக்கம்**

சிறுநீரகங்கள் சரியாகச் செயல்படாதபோது, நீரும் உப்பும் உடலில் தேங்கிவிடுகின்றன. ஈர்ப்பு விசையின் காரணமாக, இந்த நீர் கால்களின் அடிப்பகுதியை நோக்கி இறங்குகிறது. இதனால் கணுக்கால் மற்றும் பாதங்களில் வீக்கம் ஏற்படுகிறது. மருத்துவ மொழியில் இது 'எடிமா' (Edema) என்று அழைக்கப்படுகிறது. இவற்றுடன், அடிக்கடி சிறுநீர் கழித்தல் (குறிப்பாக இரவில்), தசைப் பிடிப்புகள், மூச்சு விடுவதில் சிரமம் மற்றும் தூக்கமின்மை ஆகிய அனைத்தும் சிறுநீரக நோய்களைச் சுட்டிக்காட்டும் அறிகுறிகளாகும்.

# வீட்டு காஸ் சிலிண்டர் எடை குறைகிறதா? தட்டுப்பாட்டை சமாளிக்க புதிய திட்டம்!



புதுடில்லி, மார்ச். 24–

மேற்காசிய பிராந்தியத்தில் நீடிக்கும் போர் காரணமாக, நம் நாட்டில் வீட்டு உபயோக சமையல் காஸ் சிலிண்டருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனவே, நிலைமையை சமாளிக்க, 14.2 கிலோ கொண்ட வீட்டு சமையல் சிலிண்டரின் எடையை, 10 கிலோவாக குறைக்க எண்ணெய் நிறுவனங்கள் திட்டமிட்டுள்ளன.

மேற்காசிய பிராந்தியத்தில் ஈரான் ––– இஸ்ரேல் – அமெரிக்கா இடையே நான்காவது வாரமாக போர் நீடித்து வருகிறது. இதனால், சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளது.

உலக அளவில் 20 சதவீத அளவுக்கு கச்சா எண்ணெய் கப்பல் போக்கு வரத்து நடக்கும் ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் முடக்கியதால், நம் நாட்டிற்கு இறக்குமதி கச்சா எண்ணெய் வரத்து குறைந்தது. இதனால், வீட்டு உபயோக காஸ் சிலிண்டர் மற்றும் வணிக பயன்பாட்டு காஸ் சிலிண்டருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த தட்டுப்பாட்டை போக்க, வேறு வழியில் கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கையை மத்திய அரசு முன்னெடுத்துள்ளது. இதற்கு முன், 27 நாடுகளில் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்ட நிலையில், அந்த எண்ணிக்கை 41 நாடுகளாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில், வீட்டு உபயோக காஸ் சிலிண்டர் அனைவருக்கும் கிடைக்கும் வகையில், 14.2 கிலோ எடையை, 10 கிலோ எடையாக குறைத்து வினியோகிக்க எண்ணெய் நிறுவனங்கள் திட்டமிட்டுள்ளன.

வழக்கமாக 14.2 கிலோ எடை கொண்ட வீட்டு காஸ் சிலிண்டர் சராசரியாக, 40 நாட்கள் வரை வரும் என கூறப்படுகிறது. அந்த வகையில், 10 கிலோ எடை கொண்ட வீட்டு காஸ் சிலிண்டர் 25 – 30 நாட்கள் வரை நீடிக்கும் என்பதால், வினியோக தொடரில் ஏற்பட்டுள்ள பாதிப்பை ஓரளவுக்கு சரிகட்ட முடியும் என எண்ணெய் நிறுவனங்கள் கருதுகின்றன.

எடையை குறைக்கும் அதே வேளையில், விலையையும் அதற்கேற்றபடி குறைத்து, சிலிண்டரில் அதற்கான ஸ்டிக்கர்களை ஒட்டலாம் என்ற முடிவையும் எடுத்துள்ளன. எனினும், எடை குறைப்பு நாடு தழுவிய அளவில் போராட்டங்களுக்கு வித்திடும் என்பதால், இந்த விவகாரத்தில் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

குறிப்பாக தமிழகம், கேரளா, அசாம், புதுச்சேரி, மேற்கு வங்க மாநிலங்களில் சட்டசபை தேர்தல் நடக்கவுள்ள சமயத்தில், எடை குறைப்பு சிலிண்டர் வினியோகம் பெரும் புயலை கிளப்பலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

நம் நாட்டின் எரிவாயு தேவையில், 60 சதவீதம் வளைகுடா நாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகிறது. அதிலும், 90 சதவீதம் ஹார்முஸ் ஜலசந்தி வழியாகவே வருகிறது. அந்த பாதையை ஈரான் மூடியிருப்பதால், நம் நாட்டின் நுகர்வு 17 சதவீதம் வரை சரிந்துள்ளது. தற்போதைக்கு நம் நாட்டின் தேசியக்கொடி ஏந்திய ஆறு எண்ணெய் கப்பல்கள் பாரசீக வளைகுடா கடல் பகுதியில் நிறுத்தப்பட்டுள்ளன.

# பதவி கேட்டு கடிதம் வழங்கினார் சரத்குமார்!



சென்னை, மார்ச். 24–

சமத்துவ மக்கள் கட்சியை நடத்தி வந்த சரத்குமார், தன் கட்சியை பா.ஜ.,வில் இணைத்து இரண்டு ஆண்டுகளாகியும், அவருக்கு கட்சியில் பதவி ஏதும் வழங்கப்படவில்லை. இதையடுத்து, தன் ஆதரவாளர்களுடன், சென்னை, தி.நகரில், நேற்று முன்தினம் அவர் ஆலோசனை நடத்தினார்.

பின், செய்தியாளர்களிடம் பேசிய அவர், 'கடந்த 2024 மார்ச் 12ல், பா.ஜ.,வில் இணைந்தோம். இதுவரை எனக்கும், மற்றவர்களுக்கும் பதவி வழங்கவில்லை என்ற ஆதங்கம் நிர்வாகிகளிடம் உள்ளது. எனக்கும் ஆதங்கம் இருக்கிறது.

'பதவி இருந்தால் தான், என்னால் செயல்பட முடியும். இது தொடர்பாக, கட்சியில் கடிதம் வழங்க உள்ளேன்' என்றார்.

அதன் தொடர்ச்சியாக, சென்னையில் நேற்று காலை, தமிழக பா.ஜ., தலைவர் நயினார் நாகேந்திரனை சந்தித்து, பதவி கேட்டு வேண்டுகோள் கடிதத்தை சரத்குமார் வழங்கினார்.

பின் அவர் கூறுகையில், “வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். 'நீங்கள் சொல்வது நியாயம் தான், பரிசீலனை செய்கிறேன்' என, நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

''என் ஆதங்கத்தை தெரிவித்து விட்டேன்; தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. நான் கோவை செல்ல இருப்பதால், சென்னை வந்த மத்திய அமைச்சர் பீயூஷ் கோயலை சந்திக்கவில்லை,'' என்றார்.

# மகளிருக்கு 33% இட ஒதுக்கீட்டை அமல்படுத்த மத்திய அரசு தீவிரம்.. மக்களவை தொகுதிகள் அதிகரிக்க வாய்ப்பு!



புதுடெல்லி, மார்ச். 24–

பாராளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களில் மகளிருக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை அமல்படுத்துவதற்கான பணிகளை மத்திய அரசு முடுக்கிவிட்டுள்ளது.

2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் இந்தச் சட்டத்தை கொண்டு வர மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த சட்டம் அமலானால் மக்களவை இடங்களின் மொத்த எண்ணிக்கை 543 லிருந்து 816 ஆக உயர வாய்ப்புள்ளது.

இதில் சுமார் 273 இடங்கள் பெண்களுக்கு ஒதுக்கப்படும். இது மொத்த இடங்களில் 33 சதவீத இடஒதுக்கீட்டை உறுதி செய்யும்.

2023இல் நிறைவேற்றப்பட்ட பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டபோது, புதிய மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் தொகுதி மறுவரையறைக்குப் பிறகே இந்த இடஒதுக்கீடு நடைமுறைக்கு வரும் என்று கூறப்பட்டிருந்தது.

ஆனால், இந்தச் செயல்முறைகளை விரைந்து முடித்து, வரும் பட்ஜெட் கூட்டத்தொடரிலேயே இதற்கான மசோதா வைத்தாக்கல் செய்ய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது என தகவல் வெளியாகி உள்ளது. இதற்காக அரசியல மைப்புச் சட்டத்தில் சில திருத்தங்களைக் கொண்டு வரவும் அரசு ஆலோசித்து வருகிறது. 2029 தேர்தலுக்கு முன்னதாகவே இந்த சட்டத்தை கொண்டு வர அரசு முனைப்பு காட்டி வருகிறது.

# கொலம்பியாவில் 125 பேருடன் சென்ற ராணுவ விமானம் விழுந்து நொறுங்கியதில் 66 பேர் உயிரிழப்பு!!



பொகோடா, மார்ச். 24–

கொலம்பியாவில் 125 பேருடன் சென்ற ராணுவ விமானம் விழுந்து நொறுங்கியதில் 66 பேர் உயிரிழந்தனர். கொலம்பியாவின் தெற்கு பகுதியில் உள்ள புட்டுமயோ மாகாணத்தில் இருந்து அந்நாட்டு ராணுவத்திற்கு சொந்தமான C–130 ஹெர்குலிஸ் ரக விமானத்தில் 116 வீரர்கள் உட்பட 125 பேர் புறப்பட்டு சென்றனர். விமானம் மேலே எழும்பிய சில நிமிடங்களில் கட்டுப்பாட்டை இழந்ததாக கூறப்படுகிறது. பெரு, ஈக்வெடார் எல்லையில் உள்ள Puerto என்ற பகுதியில் விமானம் கீழே விழுந்து வெடித்து சிதறியது. விமான விபத்தை பார்த்து அதிர்ச்சி அடைந்த அப்பகுதி மக்கள், மீட்புப் படையினருக்கு தகவல் அளித்தனர். சம்பவ இடத்திற்கு விரைந்துச் சென்ற மீட்புப் படையினர், 50க்கும் மேற்பட்டோரை மீட்ட நிலையில், 66 பேர் உயிரிழந்ததாக அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது.

ஏராளமானோரை படுகாயங்களுடன் மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். பலர் மிகவும் மோசமான நிலையில் இருப்பதால், பலியானோரின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையே, காட்டுப்பகுதியில் விழுந்த விமானம், கொழுந்துவிட்டு எரிந்ததால் பல அடி உயரத்திற்கு கரும்புகை எழுந்தது தொடர்பான வீடியோக்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றன. விபத்திற்கான காரணம் உடனே தெரியாத நிலையில், விசாரணை நடைபெற்று வருகிறது. விரைவில் இதுகுறித்த கூடுதல் தகவ ல்கள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.கொ லம்பியா விமானப்படையின் சமீபகால வரலாற்றில் நிகழ்ந்த மிக மோசமான விபத்துகளில் ஒன்றாக இந்த சி–130 ஹெர்குலஸ் விமான விபத்து நிகழ்ந்துள்ளது.

# குழந்தைகளை கையில் வைத்துக்கொண்டு பிரசாரத்தில் பங்கேற்க தடை!



திருவனந்தபுரம், மார்ச். 24–


கேரளம் மாநிலத்தில் உள்ள 140 சட்டசபை தொகுதிகளுக்கான தேர்தல், வருகிற ஏப்ரல் 9–ந்தேதி ஒரே கட்டமாக நடத்தப்படுகிறது. தேர்தலில் போட்டியிடக்கூடிய வேட்பாளர்கள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வரும் நிலையில், தேர்தல் ஆணையம் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

பிரசாரத்தில் ஈடுபடக் கூடியவர்களும், பங்கேற்பவர்களும் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகளை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது. அதில் குழந்தைகளை எந்த விதத்திலும் பிரசாரத்தில் ஈடுபடுத்தவோ, பங்கேற்கவோ செய்யக்கூடாது. குழந்தைகளை கையில் வைத்துக்கொண்டு பிரசாரம் செய்யக்கூடாது என்று கூறப்பட்டுள்ளது.

இந்த உத்தரவுகளை பிரசாரத்தில் ஈடுபடும் அரசியல் கட்சியினர்– சுயேட்சை வேட்பாளர்கள் மற்றும் பங்கேற்பவர்கள் கடைபிடிக்கிறார்களா? என்று தேர்தல் பணியில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர்.

# வேலை வாய்ப்பு

## அரசு வேலை (காகிதப் பொருட்கள் மற்றும் பிரிண்டிங் துறை) 23 காலியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, தமிழ்நாடு

அறிவிப்பு எண்: B2/6508/2026 தேதி: 06.03.2026

பணி வகை: தமிழ்நாடு அரசுப் பணிகள்

வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்

மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 23 உதவி ஆஃப்செட் இயந்திர தொழில்நுட்ப வல்லுநர், இளநிலை மின்சார வல்லுநர், இளநிலை மெக்கானிக், பிளம்பர் மின்சார வல்லுநர் பணியிடங்கள்

பணியிட மாற்றம்: சென்னை

தொடங்கும் தேதி: 06.03.2026

கடைசி தேதி: 08.04.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.statio–neryprinting.tn.gov.in/

# சினிமா துளிகள்..!

## 'ஜனநாயகன்' படம் வெளியீட்டில் தேர்தல் ஆணையம் தலையீடா..?



சென்னை, மார்ச்,. 24–

தலைமைச் செயலகத்தில் தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:–

தேர்தல் நடத்தை விதிகள் அமலானதை தொடர்ந்து வாகன சோதனைகள் தமிழகம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு செல்லப்பட்ட ரூ.151.93 கோடி மதிப்பிலான ரொக்கம் மற்றும் தங்கம், வெள்ளி, இலவச பொருட்கள் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டு உள்ளன. அவற்றில் தங்கம், வெள்ளி ஆகியவற்றின் மதிப்பு மட்டும் ரூ.92.02 கோடியாகும். ரூ.72 லட்சம் மதிப்புள்ள மதுபானங்களும் பிடிபட்டுள்ளன.

ஜனநாயகன் படம் வெளியீட்டில் தேர்தல் ஆணையத்தின் தலையீடு பற்றி இதுவரை எந்த தகவலும் எனக்கு கிடைக்கவில்லை. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையில் உள்ள வாக்காளரின் புகைப்படம் முழுவதுமாக மாறுபட்டு இருந்தால் ஓட்டுப்போட அனுமதிக்க மாட்டார்கள். இப்போதுள்ள நிலைக்கும், புகைப்படத்துக்கும் லேசான மாற்றங்கள் இருந்தாலும் அது ஏற்கப்படும்.

வாக்காளர் தகவல் சீட்டை வைத்து ஓட்டுபோட எந்த வாக்காளரும் உரிமை கோர முடியாது. தேர்தல் கமிஷன் அங்கீகரித்துள்ள ஆதார் உள்ளிட்ட 12 புகைப்பட ஆவணங்களில் ஏதாவது ஒன்றை காண்பித்துத்தான் வாக்குப்பதிவு செய்ய முடியும். புதிதாக வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்ட 23 லட்சம் வாக்காளர்களில் 13 லட்சம் பேருக்கு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வினியோகிக்கப்பட்டு உள்ளது. தபால் மூலம் அடையாள அட்டை அனுப்பப்பட்டு வருகிறது. முகவரி சரியில்லை என்றால் எங்களுக்கே திரும்பி வந்துவிடும்.

கடந்த ஜனவரி 1–ந் தேதியை தகுதி அளிக்கும் நாளாக கொண்டு 18 வயது நிரம்பியவர்கள் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விண்ணப்பிக்கலாம். அடுத்ததாக ஏப்ரல் 1–ந் தேதியை தகுதி அளிக்கும் நாளாக கொண்டு புதிய வாக்காளர்களை சேர்க்க முடியும். இப்படி 3 மாதங்கள் இடைவெளியில் ஆண்டுக்கு 4 முறை வாக்காளர்கள் சேர்க்கப்படுவார்கள்.

அரசியல் கட்சிகள் சார்பில் நட்சத்திர பேச்சாளர்களின் பிரசார தேதி குறித்த பட்டியல் இதுவரை எங்களுக்கு வரவில்லை. இன்னும் கால அவகாசம் உள்ளது. தேர்தல் புகார் தொடர்பாக இதுவரை 932 மனுக்கள் வந்துள்ளன. இதில் 20 மட்டும் நிலுவையில் உள்ளன. பொதுமக்களிடம் இருந்து புகார்கள் எதுவும் வரவில்லை.

அரசியல் கட்சிகள் சார்பில் ஒருவர் மீது ஒருவர் புகார்கள் கூறுகின்றனர். தேர்தல் விதிமுறைகள் மீறல் தொடர்பாக 462 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881





# அனல் பறக்கும் தேர்தல் களம்..!



## தேமுதிகவுடன் திமுக தொகுதிப் பங்கீடு பேச்சு?

சென்னை, மார்ச். 24–

தேமுதிகவுடனான தொகுதிப் பங்கீட்டு பேச்சுவார்த்தையை திமுக மார்ச். 25–ல் நடத்த உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது, தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தைக்காக 5 பேர் கொண்ட குழுவை தேமுதிக அமைக்கிறது.



தேமுதிக அவை தலைவர் இளங்கோவன், பொருளாளர் எல்.கே.சுதீஷ் பேச்சுவார்த்தைக் குழுவில் இடம்பெற உள்ளதாகவும் பேச்சுவார்த்தை நாளை தொடங்கும் நிலையில் முதல் நாளிலேயே தொகுதிப்பங்கீடு ஒப்பந்தம் கையெழுத்தாகும் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஒரு கூட்டணி வெற்றிகரமாக செல்ல மற்றவர்கள் தொகுதியை விட்டுக் கொடுக்கும்போது நாங்களும் விட்டுக்கொடுக்க தயாராக இருக்கிறோம் என தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா தெரிவித்திருந்த நிலையில், நாளை தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை நடக்க இருக்கிறது.

விசிகவுடன் திமுக மார்ச் 23 (இன்று) தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை நடத்த உள்ளது குறிப்பிடத்தக்கது.

## திமுக கூட்டணியில் பிளவு... புதுச்சேரியில் தனித்துப் போட்டி! - திருமாவளவன் அறிவிப்பு!

புதுச்சேரி, மார்ச். 24–

விடுதலைச் சிறுத்தைகள் கட்சிதலைவர் திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கையில், புதுச்சேரி மாநிலத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி கடந்த பல ஆண்டுகளாக அங்கம் வகித்து சட்டப்பேரவைத் தேர்தல்களை சந்தித்து வருகிறது. 2001 ஆம் ஆண்டு இரண்டு தொகுதிகளில் திமுக தலைமையிலான –கூட்டணியில் போட்டியிட்டோம். கடந்த 2021 ஆம் ஆண்டு தேர்தலில் உழவர்கரை பொதுத் தொகுதியை மட்டுமே காங்கிரஸ் ஒதுக்கியது. கூட்டணிக்கு நெருக்கடி வரக்கூடாது என்ற வகையில் அப்போது அதனை ஏற்றுக் கொண்டு போட்டி யிட்டோம். ஆனால், கூட்டணிக் கட்சிகளின் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. எனினும், சுமார் 6 ஆயிரம் வாக்குகளுக்கு மேலாக பெற்றோம்.

தற்போது நடைபெற உள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி 3 தொகுதிகளைக் கோரியிருந்தது.



நீண்ட இழுபறிக்குப் பின்னர் வேட்புமனுத் தாக்கல் முடிந்த பிறகே காங்கிரஸ் கட்சிக்கும் திமுகவுக்கும் இடையிலான தொகுதி எண்ணிக்கை முடிவு செய்யப்பட்டுள்ளது. கூட்டணியில் அதிக இடங்களில் போட்டியிடும் காங்கிரஸ் கட்சி மற்ற கூட்டணிக் கட்சிகளுக்குத் தொகுதிகளை ஒதுக்க முன்வரவில்லை. திமுக தரப்பிலிருந்து ஒரு தொகுதியை விசிகவுக்கு ஒதுக்க முன்வந்துள்ளது. இருந்த போதிலும் வேட்பு மனு தாக்கல் முடிந்த பிறகும் கூட அது எந்தத் தொகுதி என்பது இன்னும் உறுதியாகவில்லை.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, சிபிஐ வேட்பு மனு தாக்கல் செய்துள்ள தொகுதிகள் அனைத்திலும் காங்கிரஸ் கட்சியும் வேட்புமனு தாக்கல் செய்துள்ளது. விசிக'வுக்கு இதுவரை எந்தத் தொகுதி என்பதே தெரியாத நிலையில் எமது கட்சி நிர்வாகிகள் தேவையற்ற மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர்.

எனவே, விசிக சார்பில் தற்போது வேட்புமனுத் தாக்கல் செய்துள்ள ஊசுடு, நெட்டப்பாக்கம் மற்றும் உழவர்கரை ஆகிய மூன்று தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிட முடிவு செய்துள்ளோம். நாங்கள் போட்டியிடாத மற்ற தொகுதிகளில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவு அளிக்கப்படும் .

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## தொகுதியில் முந்திய காங்கிரஸ்.. சின்னத்தில் முந்தப்போகும் பாஜக...!

சென்னை, மார்ச். 24–




தமிழகத்தில் அடுத்த மாதம் (ஏப்ரல்) 23–ந் தேதி 17–வது சட்டசபை தேர்தல் நடைபெற இருக்கிறது. இந்த தேர்தலில், ஆளுங்கட்சியான தி.மு.க. கூட்டணியில், மத்தியில் எதிர்க்கட்சியான காங்கிரஸ் கைகோர்த்து ள்ளது. அதேபோல், இங்கே எதிர்க்கட்சியான அ.தி.மு.க. கூட்டணியில், மத்தியில் ஆளுங்கட்சியான பா.ஜ.க. இடம்பெற்றுள்ளது. கடந்த (2021) சட்டசபை தேர்தலிலும் இதே நிலைதான் இருந்தது.

**காங்கிரஸ் கட்சிக்கு 3 தொகுதிகள் கூடுதல்**

2021 சட்டசபை தேர்தலில், தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் கட்சி 25 தொகுதிகளில் போட்டியிட்டு, அதில் 18–ல் வெற்றி பெற்றது. பிறகு, ஈரோடு கிழக்கு தொகுதி காங்கிரஸ் எம்.எல்.ஏ. திருமகன் ஈவேரா இறந்ததை தொடர்ந்து, அந்தத் தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில், அவரது தந்தையான ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

அதன்பிறகு, அவரும் மரணம் அடைந்த நிலையில், மீண்டும் நடைபெற்ற இடைத்தேர்தலில் காங்கிரஸ் கட்சி போட்டியிடாமல், தி.மு.க.வுக்கு விட்டுக்கொடுத்தது. தி.மு.க. வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் வெற்றி பெற்றார். தற்போது, காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் 17 பேர் இருக்கின்றனர்.

இந்த நிலையில், நடைபெற உள்ள சட்டசபை தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் கட்சிக்கு 28 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஒரு ராஜ்ய சபா சீட்டும் வழங்கப்பட்டுள்ளது. தொகுதிகளின் எண்ணிக்கையை பார்க்கும்போது, கடந்த தேர்தலைவிட 3 அதிகமாகும்.

**பா.ஜ.க.வுக்கு 7 தொகுதிகள் அதிகம்**

அ.தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றுள்ள பா.ஜ.க., கடந்த 2021 சட்டசபை தேர்தலில் 20 தொகுதிகளில் போட்டியிட்டு, அதில் 4–ல் வெற்றி பெற்றது. இந்த முறை 27 தொகுதிகளை பெற்றுள்ளது.

எண்ணிக்கையின் அடிப்படையில் பார்த்தால், கடந்த முறையைவிட பா.ஜ.க.வுக்கு 7 தொகுதிகள் கூடுதல் என்றாலும், எதிர் வரிசையில் உள்ள தேசிய கட்சியான காங்கிரசுடன் ஒப்பிடும்போது 1 குறைவுதான்.

**அன்புமணிக்கு மாம்பழம் சின்னம் கிடைக்குமா?**

அதனால், சின்னங்கள் அடிப்படையில் எண்ணிக்கையை உயர்த்த பா.ஜ.க. திட்டமிட்டுள்ளது. அதாவது, அ.தி.மு.க. கூட்டணியில் பா.ஜ.க.வுக்கு 27, பா.ம.க.வுக்கு 18, அ.ம.மு.க.வுக்கு 11 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதில், பா.ம.க. மாம்பழம் சின்னத்தில் போட்டியிட நினைக்கிறது. ஆனால், சுப்ரீம் கோர்ட்டு முடிவை பொறுத்தே மாம்பழம் சின்னம் டாக்டர் அன்புமணிக்கு கிடைக்குமா? என்பது தெரியவரும். இதேபோல், அ.ம.மு.க. குக்கர் சின்னத்திலேயே போட்டியிடும் என்று தெரிகிறது.

மேலும், இந்த கூட்டணியில் த.மா.கா.வுக்கு 3, புதிய நீதிக்கட்சிக்கு 2, இந்திய ஜனநாயக கட்சிக்கு 2, தமிழக மக்கள் முன்னேற்றக்கழகத்துக்கு 1, புரட்சி பாரதம் கட்சிக்கு 1 என்று தொகுதிகள் ஒதுக்கப்படும் என்று கூறப்படுகிறது. இதில், புரட்சி பாரதம் கட்சி மட்டும் அ.தி.மு.க.வின் சின்னமான இரட்டை இலையில் போட்டியிடும் என்று தெரிகிறது.

த.மா.கா., புதிய நீதிக்கட்சி, இந்திய ஜனநாயக கட்சி, தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம் ஆகிய கட்சிகளை பா.ஜ.க.வின் சின்னமான தாமரையில் போட்டியிட வைக்க மத்திய மந்திரியும், தமிழக பா.ஜ.க. மேலிட பொறுப்பாளருமான பியூஷ் கோயல் வலியுறுத்தி வருகிறார்.

**தாமரை சின்னத்தில் 35 பேர் போட்டி**

அவ்வாறு நடந்தால், மேலும் 8 பேர் தாமரை சின்னத்தில் போட்டியிடும் நிலை ஏற்படும். ஏற்கனவே, பா.ஜ.க. 27 தொகுதிகளில் தாமரை சின்னத்தில் போட்டியிடும் நிலையில், இந்த 8–ஐயும் கணக்கில் சேர்க்கும்போது, 35 பேர் பா.ஜ.க.வின் சின்னமான தாமரையில் போட்டியிடுவார்கள் என்று தெரிகிறது. அதை வைத்து பார்க்கும், தொகுதியில் காங்கிரஸ் முந்தினாலும், சின்னம் அடிப்படையில் பா.ஜ.க. முந்தப்போவது உறுதியாக தெரிகிறது.

## பரபரப்பாகும் தேர்தல் களம்.. மார்ச். 25–ல் பிரசாரத்தை தொடங்குகிறார் எடப்பாடி பழனிசாமி!



சென்னை, மார்ச். 24–

சட்டசபை தேர்தல் பிரசாரத்தை அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மார்ச். 25–ல் (நாளை) தொடங்குகிறார். சென்னை மயிலாப்பூர் தொகுதிக்கு உள்பட்ட மந்தைவெளி மார்க்கெட் பகுதியில் நாளை மாலை 4 மணிக்கு பிரசாரம் மேற்கொள்ள உள்ளார். ஏற்கனவே மாநிலம் முழுவதும் பிரசாரம் மேற்கொண்டநிலையில் தேர்தல் தேதி அறிவிப்புக்கு பிறகு, மீண்டும் அவர் பிரசாரம் செய்ய உள்ளது குறிப்பிடத்தக்கது.


## அதிமுக கூட்டணியில் த.மா.கா.விற்கான தொகுதிகள் முடிவு செய்யப்பட்டுள்ளதாக ஜி.கே.வாசன் அறிக்கை!



சென்னை, மார்ச். 24–

அதிமுக கூட்டணியில் த.மா.கா.விற்கான தொகுதிகள் முடிவு செய்யப்பட்டுள்ளதாக ஜி.கே.வாசன் அறிக்கை வெளியிட்டுள்ளார். நேற்று இரவு பியூஷ் கோயல் உடனான சந்திப்பின்போது முடிவு எட்டப்பட்டதாக ஜி.கே.வாசன் அறிவித்துள்ளார். எத்தனை தொகுதிகள் ஒதுக்கீடு என ஜி.கே.வாசன் தெரிவிக்கவில்லை.

## சி.வி.சண்முகத்திற்கு எதிராக போர்க்கொடி தூக்கிய விழுப்புரம் அதிமுக நகர செயலாளர் ராஜினாமா!



விழுப்புரம், மார்ச். 24–

தேர்தலில் சீட்டு விவகாரத்தில் சி.வி. சண்முகம் தன்னிச்சையாக செயல்படுவதாகக் கூறி அவருக்கு எதிராக போர்க்கொடி தூக்கிய விழுப்புரம் அதிமுக நகர செயலாளர் பசுபதி, தனது கட்சிப் பதவியை ராஜினாமா செய்தார். கட்சி பொறுப்பையும், அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து விலகுவதாக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு கடிதம் அனுப்பியுள்ளார். என்னை தொடர்ந்து அவமானப்படுத்துவதால் மன உளைச்சலில் இருப்பதாக அவர் விளக்கமளித்துள்ளார்.

## 3 மாநிலங்களில் வேட்புமனு தாக்கல் நிறைவு: களைகட்டும் தேர்தல் பிரசாரம்!




புதுச்சேரி, மார்ச். 24–

கேரளம், அசாம் மற்றும் புதுச்சேரி மாநிலங்களில் வருகிற 9–ந்தேதி சட்டசபை தேர்தல் நடைபெறுகிறது. இதற்காக கடந்த 16–ந்தேதி வேட்புமனு தாக்கல் தொடங்கியது. இதைத்தொடர்ந்து இந்த மாநிலங்களில் அரசியல் கட்சிகள் தீவிரமாக வேட்பாளர்களை அறிவித்தன. அதைத்தொடர்ந்து வேட்பாளர்கள் தங்கள் வேட்புமனுவை தொடர்ந்து தாக்கல் செய்தனர். இந்த வேட்புமனு தாக்கல் நேற்றுடன் நிறைவடைந்தது.

இந்த 3 மாநிலங்களிலும் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை இன்று (செவ்வாய்க்கிழமை) நடக்கிறது. மனுக்களை வாபஸ் பெற மார்ச். 26–(வியாழக்கிழமை) கடைசி நாள் ஆகும். வேட்புமனு தாக்கல் நிறைவடைந்துள்ளநிலையில், 3 மாநிலங்களிலும் வருகிற நாட்களில் தீவிர பிரசாரம் களைகட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அரசியல் பேசிய ஜி.வி.பிரகாஷ்!




சென்னை, மார்ச். 24–

தமிழ் சினிமாவின் முன்னணி இசையமைப்பாளரும், நடிகருமான ஜி.வி.பிரகாஷ் நடிப்பில் 'ஹேப்பி ராஜ்' என்ற படம் விரைவில் வெளியாக இருக்கிறது. இதற்கிடையில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட ஜி.வி. பிரகாஷ், சட்டமன்ற தேர்தல் குறித்து பேசிய விஷயங்கள் கவனம் ஈர்த்துள்ளன. அவர் பேசுகையில், "தமிழக சட்டமன்ற தேர்தல் நெருங்குகிறது. இந்த தேர்தலில் அனைவரும் கட்டாயம் ஓட்டுப்போடுங்கள். புதிய வாக்காளர்களும் ஆர்வமுடன் ஓட்டுப் போடுங்கள். நமது வாக்கு சதவீதம் உயரவேண்டும். அதுதான் நாட்டுக்கு நல்லது.

இந்தக் கட்சி, அந்தக் கட்சி என்று நான் பேச விரும்பவில்லை. அரசியலில் நான் இல்லை. அரசியல் நிலைப்பாடு குறித்தும் சொல்லியது இல்லை. ஓட்டுப்போடும் ஜனநாயக கடமையை தவறாமல் செய்யுங்கள் என்று மட்டும் சொல்லிக் கொள்கிறேன்" என்று கூறி டக்கென பதிலை முடித்துக்கொண்டார்.

## 50 ஆண்டுகளாக தி.மு.க.வுக்கு கைகூடாத பாபநாசம் தொகுதி!




சென்னை, மார்ச். 24–

கடந்த (2021) சட்டசபை தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள பாபநாசம் தொகுதி மனிதநேய மக்கள் கட்சிக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. அக்கட்சியின் தலைவர் ஜவாஹிருல்லா போட்டியிட்டு வெற்றி பெற்றார். நடைபெற உள்ள சட்டசபை தேர்தலிலும் பாபநாசம் தொகுதியை அக்கட்சி கேட்டுவருகிறது. ஆனால், இந்த முறை தி.மு.க.வே போட்டியிடவேண்டும் என்று அக்கட்சியினர் கூறிவருகின்றனர்.

பாபநாசம் தொகுதியில் 1952–ம் ஆண்டு முதல் 1967–ம் ஆண்டு வரை காங்கிரஸ் கட்சியை சேர்ந்த வேட்பாளர்கள் தொடர் வெற்றியை பதிவு செய்துள்ளனர். 1971–ம் ஆண்டு தேர்தலில் மட்டும் தி.மு.க. வேட்பாளர் கணபதி வெற்றி வாகை சூடினார். அதன்பிறகு, 1977 முதல் 1991–ம் ஆண்டு சட்டசபை தேர்தல் வரை காங்கிரஸ் கட்சியே வெற்றி பெற்றது.

1989–ம் ஆண்டு பாபநாசம் தொகுதியில் போட்டியிட்டு ஜி.கே.மூப்பனார் வெற்றி பெற்றார். 1996, 2001–ம் ஆண்டு தேர்தல்களிலும் த.மா.கா.வே வெற்றி பெற்றது. 2006, 2011, 2016 ஆகிய தேர்தல்களில் தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் கட்சிக்கு பாபநாசம் தொகுதி ஒதுக்கப்பட்ட நிலையில், அ.தி.மு.க. வெற்றி பெற்றது.

2021–ம் ஆண்டு தேர்தலில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட மனிதநேய மக்கள் கட்சி வேட்பாளர் ஜவாஹிருல்லா வெற்றி பெற்றார். பாபநாசம் தொகுதியில் 1971–ம் ஆண்டுக்கு பிறகு 50 ஆண்டுகளாக தி.மு.க. வேட்பாளர் வெற்றி பெற்றதாக வரலாறு இல்லை. கடந்த முறை உதயசூரியன் சின்னம் வெற்றி பெற்றாலும், போட்டியிட்ட வேட்பாளர் தி.மு.க.வை சேர்ந்தவர் இல்லை. இந்த முறை தி.மு.க.வே களம் இறங்க வேண்டும் என்று அக்கட்சியினர் கூறிவருகின்றனர். அவ்வாறு போட்டியிட்டால் தி.மு.க. வேட்பாளருக்கு வெற்றி உறுதி என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

## துணை முதல்–அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் காரில் தேர்தல் அதிகாரிகள் சோதனை!

திண்டுக்கல், மார்ச், 24–

தேனி, திண்டுக்கல் மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், திண்டுக்கல்லில் இன்று (செவ்வாய்க்கிழமை) நடக்கிறது. இதில் தி.மு.க. இளைஞர் அணி செயலாளரும், துணை முதல்–அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பங்கேற்கிறார். இதற்காக அவர், நேற்று இரவு கரூரில் இருந்து திண்டுக்கல்லுக்கு காரில் வந்தார். வேடசந்தூர் அருகே கல்வார்பட்டி பகுதியில் அவருடைய கார் வந்து கொண்டிருந்தது. அப்போது அந்த பகுதியில் உள்ள சோதனைச்சாவடியில், சட்டமன்ற தேர்தலையொட்டி நிலையான கண்காணிப்பு குழு அதிகாரிகள் வாகன சோதனையில் ஈடுபட்டு கொண்டிருந்தனர்.



இதனால் அந்த வழியாக வந்த துணை முதல்–அமைச்சரின் காரையும் அதிகாரிகள் சோதனையிட வந்தனர். அதை அறிந்த துணை முதல்–அமைச்சர் தனது காரை திறந்து அதிகாரிகள் சோதனையிடுவதற்கு ஒத்துழைப்பு அளித்தார்.

அதையடுத்து நிலையான கண்காணிப்பு குழு அதிகாரிகள், துணை முதல்–அமைச்சரின் காரை முழுமையாக சோதனை செய்தனர். அதன் பின்னரே துணை முதல்–அமைச்சரின் கார் அங்கிருந்து புறப்பட்டு திண்டுக்கல்லுக்கு வந்தது. இந்த சோதனையின்போது வேடசந்தூர் டி.எஸ்.பி. பவித்ரா, சார்பு ஆய்வாளர் பாலசுப்பிரமணியன் உள்ளிட்ட போலீசார் உடன் இருந்தனர்.

## பெரம்பூர் தொகுதியில் பிரசாரத்தை தொடங்குகிறார் விஜய்!

சென்னை, மார்ச். 24–

தமிழ்நாட்டில் இந்த முறை நான்கு முனைப் போட்டி நிலவுவதாக கூறப்படுகிறது. இதன்படி தி.மு.க., அ.தி.மு.க., நாம் தமிழர் கட்சி மற்றும் 2026 சட்டசபை தேர்தலில் புதிதாக களம் காண இருக்கும் தமிழக வெற்றிக் கழகம் தனித்து போட்டியிட இருக்கிறது. 234 தொகுதிகளுக்கும் இன்னும் வேட்பாளர்கள் அறிவிக்கப்படவில்லை என்றாலும், அக்கட்சியின் தலைவர் விஜய், வடசென்னையில் உள்ள பெரம்பூர் தொகுதியில் போட்டியிட இருப்பதாக கூறப்படுகிறது.



இதற்காக, கொடுங்கையூரை அடுத்த கண்ணதாசன் நகரில் விஜய் தங்கியிருந்து பிரசாரம் மேற்கொள்வதற்காக பங்களா ஒன்று விலைக்கு வாங்கப்பட்டுள்ளது. அந்த பங்களாவில் மார்ச். 25–ல் (புதன்கிழமை) காலை பூஜை நடத்தப்பட இருக்கிறது.

இந்த பூஜையில் பங்கேற்கும் விஜய், பெரம்பூர் தொகுதியில் நாளையே பிரசாரத்தையும் தொடங்க இருக்கிறார். 2 நாட்கள் பிரசாரம் மேற்கொள்ளும் அவர், பல்வேறு இடங்களுக்கு சென்று பொதுமக்கள் மத்தியில் வாக்கு சேகரிக்க இருக்கிறார்.

## தமிழக சட்டமன்ற தேர்தல் பணிகளுக்கான சிறப்பு பார்வையாளராக பிரதாப் சிங் நியமனம்!

சென்னை, மார்ச். 24–

"இந்திய அரசியலமைப்பின் 324–வது பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி, நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026, தொடர்பான பணிகளுக்காக, பிரதாப் சிங்கை சிறப்பு பார்வையாளராக இந்தியத் தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது. அவரின் தொடர்பு விவரங்கள் பின்வருமாறு;–

பெயர் – பிரதாப் சிங்

பதவி – சிறப்பு பார்வையாளர், தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026



அலுவலக முகவரி – அறை எண் 412, இணைப்பு கட்டிடம், ஆயகர் பவன்,சென்னை

தொடர்பு எண்கள் – அலுவலகம்: 044 28338378 கைபேசி: 7845321461

மின்னஞ்சல் – splobs.pelecd@tn.gov.in

தொடர்பு அலுவலர் – ஜெகன் மோகன், கைபேசி: 9551322999

பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் தேர்தல் தொடர்பான விவகாரங்கள் குறித்து, மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொடர்பு விவரங்கள் வாயிலாகச் சிறப்புப் பார்வையாளரை தொடர்புகொள்ளலாம்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020